ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஞானபாகத்தில் ஸர்வக்ஞனை அற்பக்ஞன் வெல்லமுடியாது. கிரியாபாகத்தில் ஸர்வசக்தனை அற்பசக்திவாய்ந்தவன் ஜயிக்கமுடியாது. ஜீவராசிகள் எல்லாம் ஸர்வக்ஞர்களாகவும் ஸர்வசக்தர்களாகவும் இல்லையென்பது ஒவ்வொருவருக்கும் பிரத்தியக்ஷானுபவம். ஆகையால் எவ்வகுப்பினராயினும் ஜீவர்கள் அற்பக்ஞர்களேயன்றி வேறில்லை. அற்பசக்தி வாய்ந்தவர்களேயன்றி ஸர்வசக்தர்களல்ல. அப்படியிருக்கையில் தற்காலத்திய ஜீவகோடிகளும் அப்படித்தான் இருக்கவேண்டுமேயன்றி வேறுவிதமாக இருக்கமுடியாது என்பது நியாயத்திற்கொத்ததான ஸித்தாந்தம். அவ்வாறிருக்க சிலமேதாவிகள் அந்த ஸர்வக்ஞனையும் ஞானத்தால் ஜயித்துவிடப் பார்க்கிறார்கள். அவனது சக்தியையும் மீற முயலுகிறார்கள். அதாவது தர்மாதர்மங்களின் ஸ்வரூபத்தையும், பிரமாணத்தையும், தேசகாலாதிகளையும், அதிகாரிகளையும் பூதபவிஷ்யத்வர்த்தமானங்களாகிய மூன்றுகாலங்களுக்கும் வியவஸ்தையாகப் பரமேசுவரன் வேதவாயிலாக ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்க, அவைகளை மாற்றிவிட்டார்சிலர்; தப்பர்த்தம்செய்து கெடுத்துவிட்டார் சிலர். நம்பினவர்களும் சில லௌகிகஸௌகரியங்களைச் சொல்லிக்கொண்டு அவர்கள் வழியைத்தொடருவதுபோல் காணப்படுகிறார்கள். ஆகவே பரமேசுவரனது ஞானத்தைவிட இவர்களது ஞானம் மேலானது போலும். பரமேசுவரனும் தர்மாதர்மஸ்வரூபங்களை மாற்றப் பயப்படுகிறார். அந்த விஷயத்தில் தற்காலத்தியவர்கள் துணிந்துவிட்டது எந்த சக்தியைக்கொண்டோ தெரியவில்லை. அவரது ஸிருஷ்டியில் ஸ்திரீகளுக்கு புருஷர்களைவிட அதிகமாக கர்ப்பாசயம் முதலிய சில ஸ்தானங்களை ஏற்படுத்தி அதன்மூலமாக பிரஜாஸந்ததி விருத்தியடையச்செய்யக் கருதிய ஈசுவரனது ஸங்கல்பத்தையும் வீணாக்கிவிடவேண்டுமென கர்ப்பத்தடைப்பிரசாரம் செய்துவருகிறார்கள். அதிலிருந்து இவர்கள் பரமேச்வரனது சக்தியையும் குறைக்கவோ மாற்றவோ முயற்சிப்பதாக ஏற்படுகின்றது. அப்பொழுது ஈசுவரனுடைய சக்தியைவிட இவர்களுடைய சக்தி அதிகம்போலும். புதுஸிருஷ்டியைச் செய்யக்கருதிய விச்வாமித்திர மஹரிஷியும் இவ்வாறு தைரியமுடையவராக பாரதாதிகளில் கூறப்படவில்லை. அவரைப்போலும் அகஸ்தியர் முதலாயினோரைப்போலும் தற்காலத்தியவர்களுக்கு கிஞ்சிற்றேனும் தபோவலிமையும்சேர்ந்துவிடுமாகில் இவர்கள் படுத்துகிற பாடு கணக்கிலடங்காது. அவ்வளவு தபஸ் சக்தி வாய்ந்த விசுவாமித்திராதிகளும் ஈசனது ஆக்ஞைக்கு அடங்கியிருந்தார்களேயன்றி மீறிநடக்கவில்லை. மீறிநடந்தவர்களான ஹிரண்யகசிபு முதலாயினோர் ஈசனது துவேஷத்திற்கு மட்டிலும் ஆளானார்களேயன்றி இஷ்டத்தையடையவில்லை. அதனால் ஸாதுக்கள் அவ்வழிநாடாமல் முன்னோர்களின் வழியில் நின்று க்ஷேமமடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

மகாமஹோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.
612

# ஆர்ய தர்மம்.

சுக்ல-ஸு மார்கழி-மீ உகூஉ

## வரதக்ஷிணையைக் குறைக்க வழி.

கொஞ்சநாளாக பெண்களைப்பெற்றவர்கள் அந்தப்பெண்ணை ஒரு வரனுக்குக் கொடுக்கவேண்டியதான நிர்ப்பந்தத்தினால் வரதக்ஷிணையின் போட்டியிலகப்பட்டுக் கஷ்டப்படுகிறார்கள். அந்த கஷ்டநிவர்த்திக்காக வரதக்ஷிணையைக் குறைக்கும் வழியை பலர் பலவிதமாகக் கூறுகின்றார். சிலர் பெண்களுக்குக் கல்யாணம் அவசியம் என்ற நிர்ப்பந்தத்தாலல்லவா இந்த வரதக்ஷிணைக்கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அந்த நிர்ப்பந்தத்தை விலக்கிவிடுவோம். புருஷர்களுக்குப்போல ஸ்திரீகளுக்கும் விவாகம் இஷ்டமானால் செய்துகொள்ளலாம். இஷ்டமில்லாவிடில்வேண்டிய அவசியமில்லை. அப்படியானால் வரதக்ஷிணை கஷ்டம் நேரிடாது என்கின்றனர். இது சாஸ்திரத்தின் முகத்தைப் பாராதவர் பேச்சாகையால் சாஸ்திரத்தை நம்பியவரது காதில் விழாது. சாஸ்திரத்திலோவெனில்

"असंस्कृतायाः कन्यायाः कुतो लोकस्तवानघ"

"விவாகஸம்ஸ்காரம் பெறாத கன்னிகையான உனக்கு பரலோகமேது? இஹலோகமுந்தானேது?" என்று விவாஹமாகாத ஸ்திரீஜாதிக்கு இஹலோகபரலோகஸுகம் கிடையாதென்று காணப்படுவதால் அதைப் பாராமல் கூறுவது ஸரியல்ல.

வேறு சிலர்—பாலிகாவிவாஹ நிர்ப்பந்தத்தால் இந்த வரதக்ஷிணைக் கஷ்டம் வந்ததாகச் சொல்லிக்கொண்டு அந்த பாலிகாவிவாஹத் தடை செய்துவிட்டால் வரதக்ஷிணை குறைந்துவிடுமென்று சொல்லுகின்றனர். இதுவும் ஸரியாகத் தோன்றவில்லை. ஏனெனில் கூறுவாம், இந்தக்கக்ஷிக்காரர்கள் 30, 40-வருஷங்களுக்குமுந்தி நடந்த விவாஹக்கதையைக் கேட்டிருப்பார்களானால் இப்படிச் சொல்லமாட்டார்கள். 30,40வருஷங்களுக்குமுன் பாலிகாவிவாஹந்தான்

தவருமல் நடந்துவந்ததாம். அப்பொழுது இந்த வரதக்ஷிணைப் பேச்சேகிடையாதாம். பெண்ணுக்குத்தான் பணமிட்டுக் கலியாணம்செய்துகொண்டார்களாம். பழைய குடும்பங்களில் அந்தக் கணக்கு இன்னும் அவர்களுடைய குடும்பக்கணக்கில் காணப்படுகின்றது. இதில் சிலாது சங்கை—,பாலிகாவிவாஹமுறையெல்லாம் கொஞ்சநாளாகத்தான் ஆரம்பிக்கப்பட்டது அதாவது முகம்மதியர்களுக்குப் பயந்து பிராசீனமாய் நடந்துவந்த பிரௌடாவிவாஹமுறையை மாற்றி பாலிகாவிவாஹத்தையாரம்பித்தார்கள். பிரௌடாவிவாஹமுறையில் வரதக்ஷிணை நிர்ப்பந்தமில்லாமலிருந்ததே, பாலிகாவிவாஹந்தொடங்கியும் சிலகாலம் தொடர்ந்து வந்தது. நீண்டகாலமாய்விட்டபடியால் அந்த வரதக்ஷிணை நிர்ப்பந்தம்வாவா அதிகமாகக் கிளம்பிவிட்டது" என்று. இந்த சங்கை ஸரியல்ல. முதலாவது பிராசீனமாக பிரௌடாவிவாஹம் நடத்தப்பட்டுவந்ததாக இவர்கள் கூறும் வார்த்தையைத்தவிர வேறு பிரமாணமொன்றையும் காணோம். பிரமாணக்கிரந்தங்களெல்லாம் ஸ்ருஷ்டிகாலம்முதற்கொண்டே பாலிகாவிவாஹந்தான் நடத்தப்பட்டுவந்ததாகப் போதிக்கின்றனவேயன்றி இவர்கள் சொல்வது போல் போதிக்கவில்லை. விவாஹமந்திரங்களின் பொருளை கவனித்தால் மணப்பெண் பிரௌடையாக இருக்கவேணுமென்று தோன்றுகிறதேயென்றால் இது பிரமத்தால் உண்டான தோற்றம். மனுஸ்மிருதி எட்டாவது அத்தியாயத்தில்—

पाणिग्रहणिका मन्त्राः कन्यास्वेव प्रतिष्ठिताः ।
नाऽकन्यासु क्वचिन्नृणां लुप्तधर्मक्रिया हिताः ॥२२६॥

"பாணிக்கிரஹணத்தில் விநியோகிக்கப்பட்ட மந்திரங்கள் கன்னியாசப்தத்தைச் சேர்த்துக்கொண்டிருப்பதால் அதாவது அந்த மந்திரங்களுள் சிலமந்திரங்களில் கன்னியாசப்தம் காணப்படுவதால் கன்னிகைகளிடத்திற்றான் நிலைபெறுகின்றன. கன்னிகையில்லாதவளிடத்தில் நிலைக்கின்றதில்லை. ஏனெனில் அவர்கள் தர்மவிவாஹமுடையவர்களல்ல."

என்று கூறப்பட்டிருப்பதாலும், அதற்குச் சொல்லூகப்பட்ட வியாக்கியானத்தில்— "नासौ धर्म्यो विवाह् इत्यर्थः" இந்த விவாஹம் (கன்னிகையல்லாதவள் விவாஹம்) தர்மமாயுள்ளதல்ல என்று தாத்பரியம் கூறப்பட்டிருப்பதாலும் விவாஹமந்திரங்கள் பிரௌ

டாவிவாஹத்தைக் கனவிலும் நினைக்கவில்லை. கன்னிகையென்ற பதத்திற்குக் கலியாணமாகாதவள் என்றுதான் பொருளேயன்றி பிரௌடையாகாதவள் என்று பொருளல்ல என்றால் அதுவும் வயோநிர்ணயக்கிரந்தத்தில் கன்னியாசப்தார்த்தம் விசாரித்த விடத்திற்கு முற்றும் விரோதமாயிருப்பதால் ஸரியல்ல. (வயோ நிர்ணயக்கிரந்தம் அடுத்த ஸஞ்சிகைமுதல் வெளிவரும்.) இதை யொட்டின விசாரத்தில் க்ஷதயோனி, அக்ஷதயோனி, ஸமாவேசனம் முதலிய சப்தங்களின் அர்த்தமும் விசாரிக்கப்பட்டிருக்கின்றது. ஆங்கே காணலாம். ஆகவே விவாஹமந்திரங்கள் பிரௌடா விவாஹத்தை போதிப்பதாகக் கூறுவது பிரமித்தாலாம். முகம்மதியர்களுக்காக பயந்து பாலிகாவிவாஹம் தொடங்கப்பட்டதாக அபாண்டமாகக் கூறுகின்றார்கள். 'இதற்கு ஆதாரம் எங்கேயோ தெரியவில்லை, சரித்திர ஆராய்ச்சி ஆதாரமென்றால் இந்த ஆராய்ச்சி வேதார்த்த ஆராய்ச்சிக்குமுன் நிலைக்காத ஆராய்ச்சி. அப்படியே ஒத்துக்கொண்டாலும் இப்பொழுது அந்த பயம் நீங்கிவிட்டதென்பதற்கு என்ன நம்பிக்கையோ தெரியவில்லை. இதெல்லாம் சிறுவரையேமாற்றுவதற்குச்சொல்லும் கதையேதவிர வேறில்லை. இதிருக்கட்டும். பிரௌடாவிவாஹமுறையைக் கையாண்டுவிட்டால் வரதக்ஷிணைப்பிசாசு ஓடிப்போகுமா? பிரௌடாவிவாஹம் வரதக்ஷிணைப்பிசாசை விரட்டும் ஆபிசாரமா? அல்லது பிரௌடையைக்கண்டவுடன் வரனைச்சேர்ந்த சுற்றத்தாருக்கு எதிர்ஜாமீன் பணத்தில் ஆசை நீங்கிவிடுமா? இப்பொழுது சிற்சிலவிடத்தில் பிரௌடாவிவாஹம் நடத்தப்பட்டும் ஆங்கு வரதக்ஷிணை குறைந்ததாகக் கேழ்விப்படவில்லை. பெண்வீட்டுக்காரனிடமிருந்து பணத்தைப் பிடுங்கவேண்டுமென்ற பேராசை பிடித்தவர்களுக்கு பின்னும் அந்த மணப்பெண்மீது தோஷகற்பனை செய்து வரதக்ஷிணையை அதிகப்படுத்த இம்முறை காரணமாகுமேயன்றி ஒருபொழுதும் குறைப்பதற்குக் காரணமாகாது. ஆனால் நமது பிராசீன தர்மத்தில் ஜனங்கள் சிரத்தையுள்ளவர்களாயிருந்தால் இந்த வீண் ஆடம்பரங்கள் விலகும். ஜனங்கள் வீணாடம்பரத்திற்கு ஆசைப்பட்டல்லவா பாடுபட்டுத்தேடிய பொருளையும் பலவழியில் அழிக்கிறார்கள். தர்மவழியில் சென்றால் ஒருவித பணச்சிலவுமில்லை, தர்மத்திற்கும் தடையில்லை. விவாஹமானவுடன் பிரவிச்யஹோமத்திற்கே வரன் தன் வீடு வந்துவிடுவானாகில் யாருக்கு என்ன சிலவு

இருக்கும்? நான்குநாளும் முந்திப்பிந்திய நாளும் பெண்வீட்டுக் காரனை காபி இல்லை, இட்டலி இல்லையென்று அவமானப்படுத்தி வைப்பதாலல்லவா அதிகச்செலவும் அதிகசிரமமுமுண்டாகின்றது. நாளுக்குநாள் வரதக்ஷிணையும் விஷமேறுவதுபோல் ஏறிக்கொண் டேவருகிறது? அதனால் இதெல்லாம் வரதக்ஷிணை குறைக்கும் வழியில்லை. நமது ஸூத்திராதிகளில் சொல்லியபடி நடந்து வீண் ஆடம்பரம் செய்யாமல் தர்மத்தைப் பிரதானமாகக் கடைபிடிப் பதுதான் வரதக்ஷிணையைக் குறைக்கும் வழி. அன்றியும் ஆங்கில பாஷையைக்கற்ற வரனைத் தேடினால் பிரௌடாவிவாஹம் செய் தாலும், கிழவிவிவாஹம் செய்தாலும் வரதக்ஷிணைக்கிராக்கி குறை யாது. நம் முன்னோர் நடந்தபடி நடப்பதே எல்லா க்ஷேமங் களுக்கும் காரணமான வழி. அதைப் பின்பற்றியே யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக.

சுபம். பத்திராதிபர்.

---

# கலிகால கோலாஹலம்.

(752-வது பக்கத்தொடர்ச்சி.)

அக்கருத்தை ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதாள் இச்செய்யுளால் அறி விக்கின்றனர்.

वेदा वा स्युः वितथवचनाः विस्मरेदीश्वरो वा
धर्माधर्मस्थितिर्विरचनामन्तको वा मृषा स्यात् ।
नित्यो वा स्यामहमिति बहुनुल्लिखन्तः समाधीन्
मेदोवृद्ध्या मुदितमनसः सर्वतो निर्वृतास्स्मः ॥

இம்மட்டோடில்லாமல் ஸ்திரீ ஸ்வாதந்த்ரியம் முதலான விஷயங் களில் வெகுப் பிரயாஸப்படுகின்றனர். ஸ்திரீகள் வெளியில் வரா மல் அகமுடையாள் **गृहिणी** என்று வீட்டுக்கார்யங்களில் மட்டி லும் ஸ்வதந்திராளாயிருந்து, புருஷனால் கொண்டுவரப்பட்ட பொருளைப் பாதுகாத்து பதிவிரதாமணியாய் விளங்கி இம்மையி லும் மறுமையிலும் இன்பமடைய முக்கிய ஸாதனமாகிறார்கள் என்பது சமீபம்வரை யாவரும் ஒப்புக்கொள்ளப்பட்டதே.

இப்போது ஸ்திரிகள் நாடகமேடைகளில் ஏறி ஆடவும், பாடவும், உத்தியோகங்களில் போட்டிபோட்டு புருஷனையும் அசட்டைச்செய்யத் துணிபச்செய்ய ஸாதகமான படிப்பை வளர்ச்சிசெய்ப ஆரவாரம் பண்ணுவதும் கலிகாலகோலாஹலமே.

பணந்தேடுவதற்கு அநுகூலமாக இருந்தால் அம்மாதிரியாக ஏற்றுக்கொள்வதற்குத் தருக்தபடியாய் தர்மத்தில் பாடுபடுவதும் கலிகாலகோலாஹலமே.

தனது புத்தியில் தோன்றுவதையே ப்ரமாணமாகக்கொண்டு "கண்டதே காக்ஷி கொண்டதே கோலம்" என்றபடி உலகத்திற்கு நன்மை ஸாதிப்பதுபோல் பறை சாற்றிக்கொண்டு தீமையையே விளைவிக்கின்றனர் என்பதும் கலிகாலகோலாஹலமே.

यत्र भार्यागिरो वेदाः यत्र धर्मोऽर्थसाधनम् ।
यत्र स्वप्रतिभा मानं तस्मै श्रीकलये नमः ॥

என்றபடி அந்தக் கலிகாலத்திற்கே ஒரு நமஸ்காரத்தைச் செய்கிறேன்.

கலிகாலத்தை வீணாக தூஷிப்பதிலும் என்ன பயன் ஏற்படப்போகிறது. அவரவர்களின் புண்ணியபாபப் பயன்களை அவரவர்களே அநுபவித்தே தீரவேண்டியிருப்பதால் தோன்றினபடி பிதற்றும்படி புத்தி ஏற்படுகிறது.

எவ்விதத்தாலும் சாஸ்திரங்களைப் பிரமாணமாகக்கொண்ட வர்ணாசிரமிகள் அவர்களின் வலையில் அகப்படாமல் ஆச்சார்யாளுடைய உபதேசமொழிகளிலேயே ஈடுபட்டு பரமேச்வரனுடைய கிருபைக்குப் பாத்திரமான வைதிகமதத்தையே நிலைநிற்கும்படி செய்து சிரேயஸ்ஸையடைவார்களாக.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

---

## விவாஹ மசோதா.

இந்த மசோதாவுக்குக் காரணம்—பிராமணர்கள் உசித தர்மங்களை அனுஷ்டிக்காமலும் அதர்மங்கள் நமக்குள் வாராதபடி தடுக்காமலும் அதர்மமாக நடப்பது சுளுவாகத் தோன்றுவதால் அதுதான் ஸரியென்றும், அதில்லாமல் நாம் இருக்கமுடியா

தென்ற ஸ்திதிக்கு வந்திருப்பதுதான். நமக்கு ஈசுவரன் கொடுத்திருக்கும் எச்சரிக்கைகளை நாம் பொருட்படுத்தாமல் இருந்துவருவதால் இம்மாதிரி ஸம்பவம்நேருவது அவரிட்ட தண்டனையாகும். இப்பொழுதாவது நாம் விழித்துக்கொள்ளவேண்டியதவசியம். அப்படியானால் உத்தாரணம் உண்டா? நிச்சயம் உண்டு. அதற்கு எவ்விதத்திலும் ஐக்கியமே சரியான வழி. தமிழ், தெலுங்கு,கன்னடம், மலையாளம் முதலிய தேசங்களிலுள்ள எல்லா ஆஸ்திகர்களும் வைதிகமார்க்கத்தில் மனப்பூர்த்தியுடன் வேலைசெய்ய ஏராளமாய்ச் சேரவேணும். அப்படிச் சேர்ந்து வேண்டிய திரவியத்தைச் சேர்க்கவேண்டும். பத்து ரூபாய்க்குக் குறையாதபடி ஒரு லாட்டரியையாரம்பித்து அதற்குவேண்டிய ஏற்பாட்டையுடனே செய்யவேண்டும். அதிலிருந்து வரும் தொகையைக்கொண்டும், வேறே கிடைக்கும் திரவியத்தைக்கொண்டும் நம்முடையதாக ஒரு தினஸரிப்பத்திரிகையைத் துவக்கவேண்டும். பண்டிதசிரேஷ்டர்களைப் பொறுக்கியெடுத்து ஸம்ஸ்கிருத யூனிவர்ஸிடியையும் ஆரம்பிக்கவேண்டும். தர்மசாஸ்திர புஸ்தகங்களையெல்லாம் சேர்த்து தற்காலத்திய துர்வாதங்களுக்கு சரியான சர்ச்சைசெய்து தர்மசாஸ்திரானுஸாரமான பதிலை ஷை தார்மிகபேபரில் பிரசுரம்செய்யவேண்டும். மற்றுமுள்ள தர்மவிஷயங்களையும் முன்னேற்ற விஷயங்களையும், மற்ற லௌகிகவிஷயங்களையும் தர்மசாஸ்திரஸித்தாந்தத்திற்கொத்தபடி பிரசுரிக்கவேண்டும். கேள்விகளுக்கு சரியான பதிலை பண்டிதர்கள்மூலம் விசாரணைசெய்து சொல்ல ஏற்பாடு செய்யவேண்டும். தர்மநெறிக்கு விரோதமாகப் பிரசுரிக்கப்படும் இதர பேபர்களின் தேவையில்லாதபடி அவைகளின் விஷயங்களையும் சேர்த்துப்போடவேண்டும். ஆர்யதர்மபத்திரிகையையும் இதுபோலுள்ள இதர ஆஸ்திகப்பேபர்களையும் ஆதரிப்பதோடு தேவையானால் தாய்பாஷையான ஸம்ஸ்கிருதத்திலும் ஒரு பேபர் நடத்தவேணும். சாஸ்திரப்படி விவாஹாதிகளை நடத்துபவர்களுக்கு அவசியத்திற்குத் தக்கபடி எல்லா உதவிகளையும் செய்துகொடுக்கவேண்டும். இவ்வளவுக்கும் மூலகாரணமாக இஷ்டதேவதைகளை எல்லோரும் பிரார்த்தித்துக்கொண்டு தங்கள் குருக்களிடமும், மடாதிபதிகளிடமும் நம்ஒற்றுமையையும்பக்தியையும் தெரிவித்து அவர்களுடைய அனுக்கிரஹத்தைப் பெறவேண்டும். நாம் நமது தர்மங்களை சிஷ்டாசார வழியாய்த் தெரிந்துகொண்டு யதாசக்தி

அனுஷ்டித்துவரவேண்டும். ராஜபாஷை பிரஜைகளுக்கு வியவஹாராதி விஷயத்தில் அவசியமாயிருப்பதால் அதை நம் சிறுவர்கள் 14-வயது வரை பிரைவேட்டாகவே படித்துக்கொள்ளலாம். அதுவரை நல்ல பண்டிதர்களிடம் ஸ்வல்பமாவது வேதாத்யயனம் ஸம்ஸ்கிருதப்படிப்பு, ஸதாசாரம் இவைகளில் சிரமப்பட்டுக் கூடிய வரையில் தெரிந்துகொள்ளவேண்டும். ஆங்கிலப்படிப்பு அதிகம் வேண்டுமென்ற அபேக்ஷையிருப்பின் 14-வயதுக்குப்பின் 4-வது பாரத்தில் ஆங்கிலப்பள்ளிக்கூடங்களில்சேர்ந்துபடிக்கலாம். பெண் குழந்தைகளுக்கு படிப்புவேண்டுமாயின் பதிவிருதாசிரோமணிகளின் சரித்திரங்கள் நிறைந்த ஸம்ஸ்கிருதபாஷைப் படிப்பைக் கற்பிக்கவேண்டும். மேல்நாட்டார் நாகரீகம்பெற்ற சிலர் தான் தோனிப் பத்திரிகைகளைப் படித்துவிட்டு நம்மவர்களைப் பழிக்கும் வழக்கத்தைமாற்றி ஆஸ்திகர்களும் சரியான மனிதர்கள்தான். கேவலம் மடிஸஞ்சியோ, கட்டுப்பெட்டியோ அல்ல அவர்களும் இந்த சில்லரைப் பரிஹாசங்களைச் செய்வது சரியல்லவென்று புத்தி அவர்களுக்கு வரும்படியாகச் செய்யவேண்டியது முக்கியமான காரியம்.

வெகுப்பிரயாசையுடன் நடந்த காசி அகிலபாரதிய பிராமண மஹாஸபையின் தீர்மானப்படியும், பின்னும் அனேக இடங்களில் நடைபெறும் பிராமணமஹாஸபைகளின் தீர்மானப்படியும் நமது ஸனாதனதர்மத்தை ஆதரித்தும் அனுசரித்தும் அனுஷ்டித்தும் வரவேண்டியது அவசியத்திலும் அவசியம். இதையெல்லாம் ஆரம்பித்து நடத்திக்கொண்டே விவாஹம் முதலியவைகளைமசோதாப்படி அல்லாமல் சாஸ்திரப்படி செய்தால்மாத்திரம் நம் அனுஷ்டானம் பலிதமாகும். இந்த மசோதாபோவதோடு நம் ஹிந்து வைதிகமதத்தைப் பாதிக்கும் மற்ற மசோதாக்களும் வாரமலிருக்கும். நாமும் சாந்தியுடனும் உற்சாகத்துடனும் நம்மவர்களை ஸ்திரப்படுத்திக் கொள்ளமுடியும். எல்லோரும் சேர்ந்து இப்படிச் செய்யத் துணிந்து தொடங்கிவிட்டால் சித்திபெறுவது முடியாததே அல்ல. அப்படி சித்திபெறுவது ஒருவருக்கு மாத்திரமல்ல. அகில இந்தியாவிலுமுள்ள எல்லா ஆஸ்திகர்களுக்கும் அனுகூலமானது. சிலராலோ, அவர்கள் உற்சாகத்தினலோ, அவர்கள் திரவியத்தாலோ மாத்திரம் இந்தக்காரியம் ஸாதிக்கக்கூடியதல்லஎன்பது இந்தமசோதா கிளம்பியதிலிருந்தேதெரிந்தவிஷயம்.

## நம் கடமை.

நம்முன்னோர்கள் மதவிஷயமாய் இன்னும் கொடூரமாய் ஹிம்ஸிக்கப்பட்டும் அதையெல்லாம் ஜயித்துக்கொண்டு நம் நாள் வரை மதத்தைக் காப்பாற்றி நம்மிடம் இப்பொழுது ஒப்புவித்திருக்கிறார்கள். அதற்கு நாம் டிரஸ்டிகள், நாம் நம் கடமையைச் செய்து நம் ஸந்ததிகளிடம் நம் மதத்தை ஒப்புவிக்கவேணும். அதற்குத் தவறினால் இக்காலத்தில் வஸிக்கும் நாமெல்லோரும் பிந்தி எப்போதும் ஸாதுக்களால் அவசியம் செய்யப்படும் நிந்தைக்குப் பாத்திரர்களாகிவிடுவோம். இதுதான் ஒவ்வொருவரின்சொந்தக்காரியமென்று எல்லா பிராமணர்களும் நிச்சயித்து உற்சாஹமாய் எதிர்பார்க்கவேண்டும். அனேக காலம் கழித்து கலியுகத்தின் முடிவில் வரப்போகிற கல்கி அவதாரம் பிராம்மணகுலத்திற்றான் ஏற்படப்போகிறதாக நமது புராணங்கள் ஒரே கருத்துடன் கூறுகின்றன. ஆகையால் பிராம்மண்யம் நசித்துவிடமாட்டாது. ஆதல்பற்றி பிராம்மண்யத்தைக் கெடுப்பதற்காகக்கிளம்பின இந்த மசோதா நடவடிக்கைக்கு வராமல் இப்பொழுதே நாம் தொடர்ச்சியாய்ப்பிரயத்தினம் செய்தால் ஈசுவரஸஹாயம் நிச்சயம் கிடைக்கும். நிமித்தமாகமாத்திரம் நாமிருக்கவேண்டும். அப்படி நிமித்தமாத்திரமாகக்கூட நாம் நிற்காதபக்ஷத்தில் நமக்கு ஈசுவரன் தண்டனையை விதித்து தான் அவதரிக்கவேண்டியதற்காக பிராம்மண்யத்தை எப்படியாவது காப்பாற்றிவைக்கும் ஸித்தியைச் செய்தே தீருவார். இப்படி அவர் செய்யக்காத்திருக்கும்போது நாம் நிமித்தமாத்திரமாக இருந்து என் தர்மத்தை நிலைநாட்ட முன்வரக்கூடாது. பூபாரத்தைக் குறைப்பதற்காக பாரதயுத்தத்தை வியாஜமாகக்கொண்டு அர்ஜுனனை நிமித்தமாத்திரமாயிருக்கச்சொல்லி துர்யோதனாதி துஷ்டர்களை பகவான் ஸம்ஹரிக்கவில்லையா? இந்த விஷயம் பகவத்கீதையைக் கேட்டிருப்பவர்களுக்குத் தெரியாமலும் நினைவுக்கு வராமலுமிருக்காது.

क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।
कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ॥

என்ற வசனமும் மறந்துவிடமாட்டாது. எழுமின்! விழுமின்! மசோதாக்காரர்களும் நம் வழிநாடுவார்கள்.

மதாபிமானி.

# ஸநாதனதர்மத்தின் அபிவிருத்தி.

இது அத்தியாவசியமான காரியம். அதோடு சாரதாமசோதாரத்தாகவேண்டியதும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியதும் முக்கியமானவைகளே. ஆகிலும் இப்படி தனித்தனியாகவோ கூட்டம் கூட்டமாகவோ சொல்லிக்கொண்டுமாத்திரமிருப்பதில் பிரயோஜனமொன்றுமில்லை. தர்மம் ஏகதேசமாவது ஸரியான ஸ்திதியில் அனுஷ்டிக்கப்பட்டு வந்தாற்றான் பிரயோஜனமுண்டு. அப்படியிருந்தால் இந்த மகோதாவே வந்திராது. ஆகையால் தர்மம் ஸரியாய் அனுஷ்டிக்கப்படுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் உடனே செய்யப்படவேண்டும். இல்லாவிடில் மகாநாடு கூடிப்பிரயாஸப்படுவதெல்லாம் வீணாய்விடும். இப்பொழுது இருந்துவரும் தினஸரிப் பேப்பர்களெல்லாம் தர்மஸ்தாபனங்களுக்கு விரோதமாகவும், முக்கியமாக லௌகிகவிஷயப் பிரதானமாகவும் பிரசுரிக்கப்படுவதால் அதை அடிக்கடி பார்ப்பவர்களுக்கு தர்மவிபரீத புத்தியே உண்டாகிறது. அதை மாற்றவேண்டுமானால் தர்மஸ்தாபனத்திற்குத் தேவையுள்ள விஷயங்களே பிரதானமாக வரும்படி ஆங்கிலத்திலோ அல்லது சுதேச பாஷையிலோ தினஸரி பேபர் ஆரம்பிக்கவேண்டியது அத்யாவசியத்தில் முதன்மையானது. ஏனெனில்— கொஞ்சம் கவனிக்கவேண்டும். மகாநாடுகளுக்கு சிலர் தான் வரமுடியும். ஆகவே அதில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள் எல்லோருக்கும் தெரியாது. பண்டிதர்களைக்கொண்டு ஊர் ஊராக உபன்யாஸங்களைச் செய்வித்து அவைகளை எல்லோரும் தெரிந்துகொள்ளும்படி செய்துவிடலாமே என்பதும் சரியல்ல. அந்தப்பண்டிதர் அவர்கள் ஒவ்வொரு இடத்திற்கும் சுமார் 6மாதத்தில் ஒரு தடவையோ இரண்டு தடவையோ தான் போகமுடியும். அவர்கள் பேசும் 1 மணி அல்லது 2 மணி காலத்திலும்கூட எல்லோரும் வந்து கேழ்ப்பதற்கு கார்யம் இடங்கொடுப்பதில்லை. கேட்டாலும் மறுபடி அதை மனனம் செய்ய இடமில்லை. பேப்பரோவெனில் 24 மணிக்குள் ஒரு தடவை வீதம் ஒவ்வொரு நாளிலும் வந்துகொண்டிருக்கும். அவரவர்களுக்கு ஸௌகரியப்பட்டகாலத்தில் கட்டாயம் பார்ப்பார்கள். பார்க்கவும் முடியும். முக்கிய விஷயங்களைத் திரும்பப்படிக்கவும் அந்த பேபரை வைத்திருந்து எப்போதும் பார்க்கவும் முடியும். ஆர்ய

தர்மம், ஆஸ்திகபிராமணன் முதலிய பேபர்கள் சிலாக்கியமாகப் பிரசுரிக்கப்பட்டுவந்தபோதிலும் அவைகள் தினஸரிப் பேப்பராய் இல்லாததாலும், லௌகிக விஷயங்கள் இல்லாததாலும் தினசரி பேபர் மாதிரி வேலைசெய்ய முடியவில்லை. தினசரிப் பேபாஞல் அதுதான் தற்காலத்தில் வெகுவாய்ப் படிக்கப்பட்டு வருகின்றன. விரும்பப்பட்டும் வருகின்றன. குளவியையே ஸ்மாணை செய்துகொண்டிருந்த புழு குளவியாகவே மாறுகிறது. இதைத்தான் பிரமகீட நியாயமென்பர். அதுபோல் நம்மவர்களுக்கு தற்போது ஆங்கிலப்படிப்பும் பழக்கமும் தினசரிபேபர்களால் புதுநாகரீகமும் ஜாஸ்தியாய்போய் மனதும் மாறி தர்மசிந்தையில்லாமலே போய்விட்டது ஆச்சர்யமல்ல. மேல்கண்ட நம்முடைய தினசரி பேபர் கிளம்பிவிட்டால் நிச்சயம் நல்லவழியை உண்டுபண்ணும். அதைப்போல எதுவும் நன்மை தாாது. ஆகையால் இப்போது நமக்கு ஸ்வயபலத்தைக் கொடுத்து நம் தர்மத்தை சிஷ்டாசாரப்படித் தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கவேண்டிய ஏற்பாடுகளையுடனே செய்வதோடு 31-3-1930 க்குள் இந்த சாரதாமசோதா ரத்தாவதற்குத் தக்க ஏற்பாடுகளும் பிறகும் எப்போதும் தர்மவிருத்தியாகி சாசுவத சுகத்தைக்கொடுக்கத் தேவையாயுள்ள ஏற்பாடுகளும் சரியாய் நடப்புக்கு வரும்படி செய்யவேண்டியது மிக்க அவசியம். அனேக மஹாநாடுகளில் முக்கிய விஷயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆயினும் அவைகள் அனுஷ்டானத்திற்கு வரத்தேவையாயுள்ள நடவடிக்கைகளில்லை. உடனே அது செய்யப்படவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

ஆஸ்திகன்.

---

## ஈசன் அருள் வேண்டும்.

நான் என்ன சொல்லப்போகிறேன். ஒருபுறம் சீர்திருத்தக் காரர்களின் அட்டஹாசத்தை நினைக்கும்போது கோபமும் துக்கமும் பொங்குகிறது. கலியின் வைபவத்தை எண்ணும்போது அவன் ஆதிபத்தியத்தில் இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ என்று திகைக்கிறது. இருக்கட்டும். அவனல்லாது அணுவுமசையாதென்ற நியாயப்படி நடப்பதெல்லாம் அவன் செயலே. ஒருவராலும் கெடுதல்கள் தடுக்கப்படாமல் மேன்

மேலே சென்றுகொண்டிருந்தால் அதுவும் அவன்ஸங்கல்பம்தான் என்று எண்ணிச் சும்மாவிருந்தாலும் அதுவும் அவனுக்குச் சம்மதமில்லை. ஆகவே,

" कर्मण्येवाधिकारस्ते । तस्मादशक्तस्सततं कार्यं कर्म समाचर "

என்ற அவன் கட்டளைப்படி முயற்சியுடன் கன்மத்தைச் செய்ய வேண்டுமென்றுதான் இங்கு கூற முன் வருகிறேன்.

பிருகிருதத்தில் நம் மதச்கோடரியான விவாஹப்ரதிபந்தகச் சட்டத்தை வெறட்ட ஆதியில் நாம் எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டோம். அவைகளில் முக்கியமாய் தினசரி சமாசாரப் பத்திரிகை ஒன்று தேசபாஷையிலும் ஆங்கிலத்திலும் ஆரம்பிப்பதென்றும் அதையும் சென்ற டிசம்பரிலேயே ஆரம்பித்துவிடுகிறதென்றும் அது ஒன்றே நம் காரிய ஸாதகத்திற்கு இன்றியமையாச் சாதனமென்றும் அதற்காக மூன்று லக்ஷம் ரூபாய் மூலதனம் வேண்டுமென்றும் தீர்மானம் செய்திருந்தோம். அதற்காக திருச்சியில் ஒரு சபையை உண்டுபண்ணி அதற்கு நாமகரணமும் செய்தோம். அதில் மகா-ள-ளஸ்ரீ T. R. ராமச்சந்திர அய்யாவர்கள் 100- ரூ 1-பங்குக்கென்று 3000-பெயர்களிடத்திலும் வசூல்செய்வதென்று கூறினர். அப்போதே அங்கிருந்த கனவான்களான ஆஸ்திகர்கள் 3000, 1000-என்று கையெழுத்திட்டனர். பிறகு பிரதிஜில்லாக்களிலும் அவைகளைச்சார்ந்த தாலூகா கிராமங்களிலும் சபையை ஏற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானித்தனர். அதற்கிணங்க இங்கு மதுரையில் மகா-ள-ளஸ்ரீ N. நடேசய்பர் அவர்கள் தன் காரியமென்று கருதி பிரதி தாலூகாக்களிலும் சென்று ஸபைகளை ஆரம்பிக்கச் செய்தனர். அதோடு பண வசூலுக்குமுயற்சிசெய்து கையெழுத்துக்களும் வாங்கினர். இவ்விதம் மற்ற ஜில்லாக்களிலும் உள்ளவர்கள் வேலை செய்ததாய்த் தெரியவில்லை. பிறகு மதிராசிலும் விசேஷ ஸபை நடந்தது. அங்கும் தீவிரமாய் ஷை சட்டத்தைக் கண்டித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வளவும் ஆஸ்திகர்கள் யாவரும் அறிவார்கள். இனிக்காரியம் முன்போல் அவ்வளவு சுறுசுறுப்பாய் நடக்கவில்லை என்றும் அறிந்திருக்கிறார்கள். இது எவ்விதமிருக்கிறது. டிஸம்பரில் ஆரம்பிப்பதாய் இடிமுழக்கம் செய்தசப்தம் எங்கே? ஜனவரி வந்துவிட்டதே என்ன ஆகப்போகிறது. அயர்ந்து தூங்

கவே பழையபடியும் ஆரம்பித்துவிட்டனரோ? யாது செய்வோமென்றே ஆஸ்திகர்கள் துயருறுகின்றனர். இவ்வியசனமடையும் நாம் யாதுசெய்யமுடியும். இதைச் செய்துமுடிக்கப் பிரபுக்களான ஆஸ்திகோத்தமர்கள் தான் முன்வர வேண்டும். அவர்கள் தான் பண உதவி புரியவேண்டும். அவர்கள் முன் நின்றால் நாமும் அனுகூலமாய்க் கூச்சல்போடலாம். அவர்கள் பின்வாங்கினால் நம் காரியமும் கெட்டுவிடும். ஆகவே காரியம் கெட்டால் சொல்லுக்குப் பாத்திரர்கள் அவர்களே ஆவார்களென்பதை அவர்களும் அறிவார்கள். இதில் முக்கியஸ்தர்களாய் வழிகாட்டி நிற்கும் பிரமுகர்களை நம் ஆர்யதர்மநேயர்களே அறிவார்களானாலும் எனக்குத் தெரிந்த சிலரையும் அவர்கள் செய்யும் முயற்சியையும் எனக்குத் தெரிந்ததை எழுதுகிறேன்.

1. மதுரை மகா-ா-ஸ்ரீ N. நடேசய்யர் அவர்கள் 2. N. L. துரை அய்யாவர்கள், திருச்சி. 3. ராஜாபஹதூர் கிருஷ்ணமாசார்யார் அவர்கள் ஸ்ரீரங்கம் 4. மகாலிங்கமய்யாவர்கள். 5. வைத்திநாதய்யாவர்கள் கும்பகோணம். இன்னும் அநேகர் இருக்கின்றனர். இவர்களும் மற்றவர்களும் மிகச்செல்வாக்குள்ளவர்களே. இவர்கள்தான் மிகவேகமாய் ஆக்டை எதிர்த்துப்போராடவேண்டும் என்றும் எவ்விதத் தியாகத்திற்கும் தயாராக இருக்கவேண்டுமென்றும் நம்மைத்தட்டி எழுப்பி ஊக்கமூட்டியவர்கள். இவர்கள் தினமும் ஒவ்வொருவர்களுக்கும் நடத்தவேண்டியவைகளுக்கும் நடத்தப்பட வேண்டியவைகளுக்கும் திட்டம்போட்டுக்கொண்டு லெட்டர் போட்டுக்கொண்டு இடை இடையில் பலவிடங்களில் சபைகளை எற்படுத்தியும் செய்யவேண்டிய திட்டத்தை நிர்ணயித்துக்கொண்டு வந்தார்கள். நடுவில் நபர் 1க்கு 10000 ரூபாய் வீதம் 30 பெயர்களிடத்திலேயே 3 லக்ஷம் ரூ வசூல் செய்துவிடுகிறதென்றும் ஊக்கம்கொண்டதாயும் கேழ்விப்பட்டேன். ஆகவே அது சீக்கிரம் வருமென்று எதிர்பார்த்ததில் என்ன சொல்வேன். எல்லாப்பேச்சும் அடங்கிவிட்டது போல் காண்கிறது. ஆதியில் இருந்த ஊக்கத்தில் 100ல்ஒரு பங்குகூட தலைவர்களுக்கில்லை. இது என்ன பாபம், ஜனவரி 9உ ஆய்விட்டது. பிப்ரவரியும் மார்ச்சும் தான் நடுவிலிருக்கிறது; பத்திரிகைப் பேச்சு எங்கே; பணம் கொடுப்பதாய்க் கூறியவாக்கும் வேலைசெய்யாமல் மௌனமாய் இருக்கிறது. இது யாருடைய பாபம். இனி நம்மை உலகம் பழிக்

ளுமே. பத்திரிகை இல்லாவிடில் நம்மால் எள்ளளவும் முன்செல்ல முடியாது. ஆதிமுதல் மகமதியர்கள் ஒரே ஊக்கமாய் நிற்கிறார்கள். நம்மவர்களின் ஊக்கம் பாதாளம் பார்க்கிறது. அடுத்த பிப்ரவரி கௌன்ஸிலில் தங்களை இந்த ஆக்டிலிருந்து விலக்கிவிடும்படி மகமதியர்கள் ஓர் திருத்தம் கொண்டுவருகிறார்கள். காங்கிரஸ்ஸில் மிஸ்டர் S. ஸத்தியமூர்த்தி அய்யாவர்கள் மதத்தில் காங்கிரஸ் நடுநிலை வகிக்கும்படி சொல்லப்போவதாய் பத்திரிகைகளில் செய்திருந்த ஆரவாரம் அத்துடன்போய்விட்டது. காசியிலிருந்து 400-பெயர்கள் காங்கிரஸுக்கு வருவதாயும் அங்கு பெரும் கூச்சல் போடப்போவதாயும் போட்டிருந்த விஷயமும் பத்திரிகையோடு அடங்கிவிட்டது. எவ்விதம் தான் நமது காரியம் கைகூடுமோ? ஈசனே! உன் திருவுள்ளம் யாதுளது? மதம் உன்னால் ஏற்படுத்தப்பட்டதென்று நாங்கள் எண்ணுகிறோம். அம்மதத்திற்கு வாடுதலேற்பட்டால் யான் தோன்றுவேனென்றும் வாக்களித்தாய். என்பக்தன் அழியமாட்டானென்று ஓ அர்ஜுனா நீ ஸத்தியம் செய் என்று உன் தோழனை ஏவினாய். ஆகவே ஸாதகபாதகம் உன்னுடையதுதான். இந்த அல்பவிஷயத்திற்காக உன் திருவவதாரம் வேண்டேன். இதற்காக இப்பொழுது தலைவர்களென்று சொல்லிக்கொண்டு தூக்கத்திலிருந்து அரைகுறையாய் எழுந்திருந்து கத்துகிறவர்போல் ஆதியில் கொஞ்சம் ஆடிவிட்டு மறுபடியும் தூக்கத்திற்கு மயங்குகிறவர்களை எழுப்பிவிடுவது மட்டிலும் உன்கடமை. பிறகு நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

இனி தலைவர்களுக்கு ஓர் விண்ணப்பம். எங்களது தலைவர்களே! நீங்கள் முதலில் பேசி எங்களுக்கு ஊக்கமூட்டிவிட்டு இவ்விதம் சும்மாவிருக்கலாமோ. இதிலேயே காலத்தைப்போக்கிக் கொண்டிருந்தால் எங்களது காரியத்தைப் பார்க்க யார் வருவார்களென்று கேட்கவேண்டாம்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

எவர்கள் என்னை வேறுகவலைகளை களைந்துவிட்டு பஜனம் செய்கின்றனரோ அவர்களது யோகக்ஷேமத்தை நான் பார்த்துக் கொள்வேனென்ற பகவானது பிரதிக்ஞை உங்களுக்குத் தெரியாததல்ல,

येन केन प्रकारेण यस्य कस्यच देहिनः ।
सन्तोषं जनयेत्प्राज्ञस्तदेवेश्वरपूजनम् ॥

எவ்விதத்தாலாவது பிராணிகளுக்கு ஸந்தோஷப்படுத்தலே ஈசனது பூஜை என்பதனாலும் ஈசனின் வாக்கை மாற்ற முயற்சிக்கிற நாஸ்திகர்களது வலையினின்றும் நம்மை விடுவிப்பதினாலும் துர்மந்திரிகளது வார்த்தையின் வலையில் விழுந்துகொண்டு தங்களது முன்னோர்களின் வாக்குறுதியை மீறி கெட்டவழியிலிறங்கும் நமது அரசரை திருப்பி நேர்வழி நல்வழியில் வாழச்செய்வதனாலும் இது ஈசன் பூஜைதானென்று உங்களிடத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நமக்கு பத்திரிகை ஒன்றே வழிகாட்டும் யந்திரம், அதில்லாமல் வேறு எவ்வழியும் பயன்படாது. இனி பத்திரிகைக்காக வெளியில் வசூல்செய்ய நீங்கள் உத்திரவிட்டால் மூன்று லக்ஷம் ஏராளமாய் அனுயாசமாய் பலலக்ஷம் வசூலாகலாம். மடாதிபதிகள் உத்திரவிட்ட பணத்தை வாங்கவாவில்லையே என்று கூவி அழைக்கின்றனர். சற்று நீங்கள் முன்வந்து பாடுபடுங்கள். உங்களுக்கு இதனால் என்றும் அழியாத கீர்த்தி தழைத்தோங்கும். ஈசன் துணைபுரிவாராக. சுபம் !

N, M. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

---

# ஆக்கிரயணம்.

பிராமணர்களுக்கேற்பட்ட 40ஸம்ஸ்காரங்களில் ஆக்கிரயணமும் ச்ரௌதோக்தமான ஓர் ஸம்ஸ்காரமாயினும் அதைவிட்டு நான் ஸ்மார்த்த ஆக்கிரயணத்தை எழுதவந்தேன்.

ஸ்மிருதியில் சொல்லியிருக்கிற கர்மாக்களில். இந்தக் கர்மாவானது நைமித்திகமானது. சரத்ருதுவில் விளைந்துவருகிற முதல் தான்யத்தை நிமித்தமாகக்கொண்டு செய்யவேண்டியது. 'ஆக்கிரயணம்' என்றால் பிரதிவருஷமும் முதலில் விளைந்துவருகிற திரவியத்தை தேவர்களுக்கு அனுப்புகிறது என்றர்த்தம். தேவர்களால் நமக்கு மழைபெய்து அதனால் நமக்கு விளைந்த தான்யத்தை நன்றி பாராட்ட தேவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அப்படிச்செய்யாவிடில் அவன் திருடனே என்று கீதையில் கூறியுள்ளார். நெல்

டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-90.



விளைந்துவராவிடினும் அக்காலத்தில் புதுநெல் கிடைக்கக்கூடியவர்களிடம் வாங்கியாவது செய்யவேண்டும். ஆகையால் ஸொந்தமாய் விளைந்துவருகிறவர்கள் கட்டாயம் செய்யவேண்டியதே? இனி இதன் காலம், முறை முதலியவைகளை விசாரிப்போம். சரத்ருதுவில் பர்வகாலங்களில் புதிதாய் விளைந்துவந்த நெல்லை தன் பத்நியைக்கொண்டு குத்தி ஔபாஸநாக்னியில் ஸ்தாலீபாகம் செய்து ஹவிஸ்ஸை சித்தம்செய்துகொண்டு அக்னிதந்திரங்களின் மத்தியில் இந்திராக்நி, விச்வேதேவர்கள், த்யாவாபிருதிவீ, ஸ்விஷ்டகிருத் என்கிற தேவர்களுக்கு தேவதைகளின் தியானத்துடன் ஹோமம் செய்துமுடித்து அந்த ஹவிச்சேஷத்தை வாய்நிறையப் போட்டு விழுங்கி ஒரு தடவை தீர்த்தம் சாப்பிட்டு ஆசமனம் செய்து பாக்கி அன்னத்தை உருட்டி வீட்டின் மோட்டுவளையில் ஒட்டிக்கொள்ளும்படி எரியவேண்டும். ஒவ்வொருவரும் இ கர்மாவைச் செய்தே புதுநெல் சாப்பிடவேண்டும். இவ்விதம இந்துக்களான நமது ஒவ்வொரு கார்யமும் லோகாந்தரஸம்பந்தமுள்ளதேதவிர கேவலம் லோகயாத்திரைக்குமாத்திரம் ஏற்பட்டதல்ல. அப்படி அந்த அன்னத்தை எரியும்பொழுது 'ஹே அன்ன பிண்டமே! நீ இப்பொழுது உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறாய். எனக்கு மேலான ஸம்பத்தான மோக்ஷத்தை அடைவிப்பாயாக' என்று அர்த்தமுள்ள மந்திரத்தைச் சொல்லவேண்டும்.

மற்றும் சதிபதிகள் ஒத்துவாழ்வதற்கும் சக்களத்தி உபத்திரவம் நீங்குவதற்கும் ராஜயக்ஷ்மா முதலிய மஹாரோகநிவர்த்திக்கும் வாதத்தில் ஜயம் பெருவதற்கும் நாய் இருமல் சங்கணை போன்ற குழந்தைப்பிணிகளுக்கும் வியாபாரஸித்தி முதலான அநேக கர்மாக்கள் நிமித்த கர்மாக்களாக ஆபஸ்தம்பர் தமது கிருஹ்யஸூத்திரத்தில் கூறியுள்ளார். அவைகளை ஸமயம் நேர்ந்தபொழுது எழுதுகிறேன். சுபம்.

"கிருஹ்யக்ஞ" வீ. உமாமகேச்வரசாஸ்திரி.